**முதன்மை மாவட்ட நீதிமன்றம், ஈரோடு**

**OS No**. 30/2020

**நாள் :** 22.01.2025

பெயர் : விஸ்வநாதன்

**PW**1: **பிரதிவாதி குறுக்கு விசாரணை** : (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

தாவா சொத்தை நான் அளந்து பார்க்கவில்லை. தாவா சொத்து தோட்ட நிலம்தான். ஆனால் தற்போது தரிசாக உள்ளது. தோட்டத்தின் மொத்த பரப்பளவு 1 3/4 ஏக்கர் ஆகும். அந்த சொத்தில் மோட்டார், கிணறு, பம்ப்செட், கம்ப்ரசர் ஆகியவை உள்ளன. வேறு எதுவும் இல்லை. நான் வாங்குவதற்கு முன்பே தரிசாக இருந்தது. இன்றுவரை தரிசாகதான் உள்ளது. யாரும் விவசாயம் செய்வதில்லை. மேற்சொன்ன 1 ¾ ஏக்கர் பரப்பளவு உள்ள தோட்டம் நான்கு நபர்களுக்கு பாத்தியப்பட்டது. அந்த நான்கு நபர்களின் பெயர்கள் எனக்கு தெரியாது, பத்திரத்தில்தான் பார்க்க வேண்டும். மூலப்பத்திரத்தை பார்க்காத காரணத்தினால் அந்த 4 நபர்களின் பெயர்கள் தெரியாது என்றால் நான் பிரதிவாதி பங்கை மட்டும் தான் வாங்கியிருக்கிறேன். மாது என்ற புரோக்கர் தான் பிரதிவாதியின் பங்கை நான் வாங்குவதற்கு என்னை தொடர்பு கொண்டார். அந்த மாது வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறார். மாது அவர்கள் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தை தவிர அது சம்பந்தமான வேறு ஆவணங்களில் கையெழுத்து செய்திருக்கிறாரா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதுவதற்கு சுமார் 1 மாதத்திற்கு முன்பு மாது என்னை தொடர்பு கொண்டார். அன்றைய தினம் கிரையத்தொகை பேசி முடிக்கப்பட்டதா என்றால் 15 நாட்களுக்கு பின்பு முடிக்கப்பட்டது. விலை பேசி முடிக்கப்பட்ட அன்று நான் எவ்வளவு தொகையை டோக்கன் அட்வான்ஸாக பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்றால் அன்றைய தினம் எந்த தொகையும் கொடுக்கவில்லை. அன்றைய தினம் முத்திரைதாள்கள் எதுவும் வாங்கப்பட்டனவா என்றால் வாங்கப்படவில்லை. விலை பேசி முடிக்கப்பட்ட பிறகு பத்திர அலுவலகத்திற்கு சென்று சொத்தின் வழிகாட்டு மதிப்பு பார்த்தேனா என்றால் இல்லை. இன்றுவரை சொத்தின் வழிகாட்டி மதிப்பை பார்க்கவில்லை. பத்திர எழுத்தர் சொத்தின் வழிகாட்டி மதிப்பை அனுசரித்து வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதினாரா என்றால் தெரியாது. தாவா சொத்து அவல்பூந்துறை சார்பதிவக எல்லைக்குள் அமைந்துள்ளது. வா.சா.ஆ.1 பத்திரத்தை எழுதிய பத்திர எழுத்தரின் அலுவலகம் ஈரோட்டில் உள்ளது. வா.சா.ஆ.1 பத்திரத்தை தயார் செய்து எடுத்து வருமாறு பத்திர எழுத்தரிடம் தெரிவித்தேன். பத்திர

எழுத்தர் வா.சா.ஆ.1 பத்திரத்தை தயார் செய்து அவல்பூந்துறை பத்திர அலுவலகத்திற்கு எடுத்து வந்துவிட்டார். பத்திர அலுவலகத்தில் சார்பதிவாளர் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டதா என்றால் பணம் கொடுக்கப்பட்டது. அன்றைய தினம் சார்பதிவாளர் முன்னிலையில் ரூ.15 லட்சம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1 பத்திரத்தின் முத்திரை தாள் வாங்கியது, பத்திரம் தயார் செய்யப்பட்டது அனைத்தும் ஒரே நாளிலா என்றால் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே சொல்லிவிட்டேன், பத்திர எழுத்தர் தயார் செய்து எடுத்துவந்தார். முத்திரைதாள்கள் யாரால் எப்போது வாங்கப்பட்டது, எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் சொல்லி பத்திர எழுத்தர் தயார் செய்து எடுத்துவந்தார். அந்த முத்திரை தாள்கள் பிரதிவாதி பெயரில் வாங்கப்படவில்லை. நாங்கள்தான் வாங்கினோம். எனக்காக பத்திர எழுத்தர் வாங்கினார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள காலக்கெடுவானது, பாக்கி கிரைய தொகையை நான் சேகரிப்பதற்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதா என்றால் அதற்காகத்தான் காலக்கெடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)